පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION - NORTH CENTRAL PROVINCE

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය
இஸ்லாமிய நாகரிகம்
ISLAMIC CIVILIZATION

தரம் 12

47 T

## விடைகள்

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 5 | 11. 2 | 21. 5 | 31. 4 | 41. 4 |
| 2. 1 | 12. 4 | 22. 4 | 32. 5 | 42. 1 |
| 3. 2 | 13. 3 | 23. 2 | 33. 1 | 43. 5 |
| 4. 2 | 14. 4 | 24. 4 | 34. 1 | 44. 1 |
| 5. 5 | 15. 3 | 25. 4 | 35. 3 | 45. 1 |
| 6. 4 | 16. 2 | 26. 1 | 36. 4 | 46. 5 |
| 7. 3 | 17. 3 | 27. 4 | 37. 5 | 47. 2 |
| 8. 5 | 18. 1 | 28. 3 | 38. 3 | 48. 1 |
| 9. 4 | 19. 2 | 29. 4 | 39. 3 | 49. 4 |
| 10. 5 | 20. 5 | 30. 5 | 40. 3 | 50. 4 |

## பகுதி II

### பகுதி I

1. (i) **இஸ்லாமிய நாகரிகம் ஏனைய நாகரிகங்களிலிருந்து வேறுபடும் விதம்**
   - இஸ்லாமிய நாகரிகம் வஹி மூலம் பெறப்பட்டது, ஏனைய நாரிகங்கள் மனித சிந்தனைகளால் உருவானது.
   - இஸ்லாமிய நாகரிகம் எக்காலத்திற்கும், இடத்திற்கும் பொருந்திச் செல்லக்கூடிய சர்வதேசமயமானது. ஏனைய நாரிகங்கள் இடம், காலம் என்பவற்றால் சுருங்கியது.
   - இஸ்லாமிய நாகரிகம் இம்மை, மறுமை இரண்டையும் இலக்காகக் கொண்டது. ஏனைய நாரிகங்கள் உலகை மட்டும் இலக்காகக் கொண்டவை.
   - இஸ்லாமிய நாகரிகம் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய முழுமைத்துவத்தைப் பெற்றது. ஏனைய நாகரிகங்கள் அவ்வாறான ஷுமூலிய்யத் தன்மையற்றவை.

   *போன்ற பொருத்தமான வேறுபாடுகள் **நான்கு** குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

(ii) **நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இஜ்திஹாதின் தேவை**

- எல்லா பிரச்சினைகளுக்கும் அல்குர்ஆனும் ஸுன்னாவும் நேரடியாகத் தீர்வு கூறாமை.
- உலக முடிவு வரை மனிதனுக்கு புதிய பிரச்சினைகளை உருவாகக் கூடியதாக உள்ளமை.
- புதிய பிரச்சினைகள் எழும் போது முஸ்லிம்கள் ஷரீஆவின் தீர்வை எதிர்பார்த்தமை.
- இஸ்லாம் நீடித்து நிலைக்க வேண்டுமாயின் புதிய பிரச்சினைகளுக்காக தீர்வுகளை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளமை
- இவ்வாறான பிரச்சினைகளுக்கான தீர்வு இஜ்திஹாத் மூலமே தீர்க்கப்பட முடியுமாக இருக்கின்றமை.

(iii) **அல்குர்ஆனைப் பாதுகாக்க ஸஹாபாக்கள் முன்னெடுத்த முயற்சிகள்**

- ஸஹாபாக்கள் அல்குர்ஆனை ஓதிவந்தனர்.
- ஸஹாபாக்கள் மனனமிட்டதுடன் தமது பிள்ளைகளையும் மனனமிடத் தூண்டினர்.
- எழுத முடியுமானவர்கள் எழுதியும் பாதுகாத்தனர்.
- நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின்னர் அதனை ஒன்றுசேர்த்து தொகுத்து வழங்கினர்.

(iv) **அல்குர்ஆன் ஒரே தடவையில் அருளப்படாமைக்கான காரணங்கள்**

- நபி (ஸல்) அவர்களை அவ்வப்போது மனம் தளராது உற்சாகமூட்டுவதற்காக
- மனனமிடுவதற்கும் பாதுகாப்பதற்கும் இலகுவாக அமைவதற்காக
- நபியவர்களிடம் அவ்வப்போது முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு விடையளிப்பதற்காக
- நடைமுறைப்படுத்துவது இலகுவாக அமைவதற்கான
- இறைமறுப்பாளர்களுக்கு எச்சரிக்கையும் சவாலும் விடுத்துக்கொண்டிருப்பதற்காக

(v) **கட்டடக் கலையில் மஸ்ஜிதின் கூறுகள்**

- *மிம்பர், மிஹ்ராப், மினாரா, குப்பா, மாடவில், ஹவ்ழ் ஆகிய மஸ்ஜித் கட்டடக்கலையின் கூறுகளில் ஏதேனும்* ***நான்கைக்*** *குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக அடையாளப்படுத்தியிருத்தல் வேண்டும்.*

(4x5 = 20 புள்ளிகள்)

**2.** (i) **நபிமார்களுக்கு வஹி அருளப்பட்ட வழிமுறைகள்**

- நேரடியாக அல்லாஹ்வுடன் உரையாடுதல்
- ஜிப்ரீல் (அலை) அவர்கள் வஹி கொண்டுவருதல்
- ஏடுகளில் இறைகட்டளைகள் வழங்கப்படுதல்
- அசரீரி மூலம் இறைசெய்தி கிடைத்தல்
- கனவு மூலம் இறைசெய்தி கிடைத்தல்

(ii) **ஹதீஸ்களின் தூய்மையைப் பாதுகாக்க உருவான கலைகள்**

**1. அஸ்மாஉர் ரிஜால்** : நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து ஹதீஸ்கள் அனைத்தும் வெளியாகியது முதல் அவை பெறப்பட்டு அறிவிக்கப்பட்டு, ஒன்று திரட்டப்பட்டு தொகுப்பாசிரியரினால் தொகுத்தெழுதப்படும் வரை யார் யாரெல்லாம் அதில் சம்பந்தப்பட்டார்களோ அவர்கள் அனைவரது வரலாறுகளையும் குறிக்கின்ற ஒரு கலையாக இது உள்ளது. அஸ்மாஉர் ரிஜால் மூலம் ஹதீஸ்களை அறிவித்தவர்களது முழுமையான தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதனால் ஒரு ஹதீஸ் தொடர்பாக இறுதியானதொரு தீர்மானத்திற்கு வர அது உதவுகிறது.

**2. இல்முல் ஜரஹ் வத்த.்.தீல் :** ஒரு ஹதீஸின் மதன் பற்றியும், ஸனத் பற்றியும் ஆராய்கின்ற கலைகளுள் இலமுல் ஜரஹ் வத்த.்.தீலும் ஒன்றாகும் இத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஹதீஸ் கலை வல்லுனர்கள் ஹதீஸ்களை நிராகரிப்பதற்கான பல அடிப்படைகளை வகுத்துத் தந்துள்ளனர்.

**3. உஸூலுல் ஹதீஸ் :** ஹதீஸின் அடிப்படை பற்றி ஆராய்கின்ற கலையாக இதனைக் குறிப்பிடலாம். இக்கலையில் ராவி - அறிவிப்பாளர், முஹத்திஸ் - ஹதீஸ் கலை அறிஞர், தாலிபுல் ஹதீஸ் - ஹதீஸை கற்போர்கள் போன்றோரது தகைமைகள் அடிப்படைகள் பற்றி எடுத்துக்

கூறப்படுகின்றது. உஸூலுல் ஹதீஸ் கூறுகின்ற நிபந்தனைகளுக்கு, வரையறைகளுக்கு முரணாகின்ற வகையில் உள்ள எந்த ஹதீஸும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகைகளினுள் அடங்கமாட்டாது.

(iii) **முஸ்லிம்களது மருத்துவத்துறைக் கண்டுபிடிப்புகள்**

- Inoculation என்று அழைக்கப்படும் கிருமி புகுத்தல், அம்மை குத்தும் Vaccication முறையை கி.பி. 1679 இல் துருக்கிய முஸ்லிம்களே முதலில் கண்டுபிடித்தனர்.
- சத்திர சிகிச்சை வைத்தியத்தில் சுடு கருவிகளை (Cauterizing Agents) முதன் முதலாகப் பயன்படுத்த ஆரம்பித்தவர்கள் முஸ்லிம்களே.
- தொற்றும் நோயான செங்கண்மாரி நோய்க்குரிய சிகிச்சையை அவர்களே கண்டுபிடித்தனர்.
- கல்லகற்றும் (Lithoromc) சிகிச்சை முறையும் அவர்களது கண்டுபிடிப்பாகும்.

(iv) **மருத்துவத் துறையில் முஸ்லிம்கள் ஈடுபாடு காட்டுவதற்குத் தூண்டிய காரணிகள்**

- உள்ளத்திற்கும் உடலுக்குமிடையிலான தொடர்பு பற்றி இஸ்லாம் விபரித்துள்ளமை
- வணக்கங்களை நிறைவேற்ற உடற்சுத்தம் வலியுறுத்தப்பட்டுள்ளமை
- மனிதனின் உடல், படைப்பு பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றமை.
- மரணத்தைத் தவிர எல்லா நோய்களுக்கும் மருந்து இருப்பதாக ஹதீஸ் குறிப்பிடுகின்றமை.

(v) **இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் வஹியின் அவசியம்**

- இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படையே வஹி
- இஸ்லாமிய நாகரிகத்தின் அனைத்து அம்சங்களும் இறைவாழிகாட்டலினால் வழங்கப்பட்டுள்ளது.
- இஸ்லாமிய நாகரிகம் போதிக்கும் நம்பிக்கைகளை விளக்க பகுத்தறிவினால் மட்டும் முடியாதுள்ளமை
- இஸ்லாமிய நாகரிகம் நீடித்து நிலைக்க அது எல்லாக் காலத்திற்கும் பொருந்திச் செல்லல் வேண்டும். அது வஹி மூலமான வழிகாட்டலினாலே சாத்தியமாகும்.

(4x5 = 20 புள்ளிகள்)

**3.** (i) **அஷ்அரிய்யாக்களின் பிரதான கோட்பாடுகள்**

- அல்லாஹ் பிரபஞ்சத்தை ‘‘குன்’’ (ஆகுக) என்ற வார்த்தை மூலம் படைத்தான்.
- நல்லடியார்கள் மறுமையில் அல்லாஹ்வை வெற்றுக் கண்களால் பார்ப்பார்கள்.
- அல்லாஹ்வின் ஸாத்தும், ஸிபாத்தும் வெவ்வேறானவையாகும்.
- அல்லாஹ்வுக்கு அறிவு, ஞானம், சக்தி போன்ற பண்புகள் உண்டு.
- அல்லாஹ்வின் பேச்சு படைக்கப்பட்டதன்று. ஆகவே அல்குர்ஆன் படைக்கப்பட்டதன்று.
- தௌஹீதை ஏற்றுக் கொண்டவர் முஸ்லிமாவார். அவர் பெரும்பாவம் செய்தால் பாவியாகக் கருதப்படுகிறார். அவர் பற்றிய முடிவு அல்லாஹ்விடமே உள்ளது.
- அல்லாஹ்வின் உதவியின்றி மனிதனால் சுயமாகச் செயற்பட முடியாது.
- சுவர்க்கமும், நரகமும் படைக்கப்பட்டுள்ளன.
- மறுமையில் அல்லாஹ்வின் ஷபாஅத் உண்டு.
- கப்ரில் முன்கர், நகீர் என்ற இரு மலக்குகளின் விசாரணை உண்டு.
- நபி (ஸல்) அவர்கள் உடலுடன் மி∴ராஜ் சென்றார்கள்.
- பகுத்தறிவை விட வஹிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். *(ஏதேனும் நான்கு)*

(ii) **மனித வாழ்வை நெறிப்படுத்துவதில் ரிஸாத்தின் அவசியம்**

- புலனறிவு, பகுத்தறிவு என்பவற்றால் அறிய முடியாத பல முக்கிய விடயங்களை வஹியின் மூலம் அறியவேண்டியுள்ளமை.
- மனிதனின் தோற்றம், வாழ்வின் நோக்கம் என்பற்றை அறிந்துகொள்ள வஹி அவசியமாகின்றமை
- மனித இனத்தின் ஒற்றுமைக்கு ஒரே மார்க்கத்தை கடைப்பிடிக்க வஹி அவசியம்

(iii) **கௌலுஸ் ஸஹாபி ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான நியாயங்கள்**

- ஸஹாபாக்கள் நபி(ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள் வஹி இறங்குவதை அவதானித்தவர்கள்; நபியவர்கள் சட்ட ஒழுங்குகளை முன்வைத்த போது ஆழ்ந்து அவதானித்தவர்கள்; பின்பற்றியவர்கள் என்றவகையில் நபித்தோழர்களது கருத்துக்களும் வாழ்வும் ஆதாரமாகக் கொள்ளத் தக்கவையாகும்.
- ஸஹாபாக்களது கருத்துக்கள் இறைத்தூதரது ஸுன்னாவாகவும் இருக்க முடியும். ஏனெனில் சிலபோது ஸஹாபாக்கள் இறைத்தூதரது கருத்துக்களை அவரது கருத்துக்கள் என்று குறிப்பிடாமல் முன்வைத்த சந்தர்ப்பங்களும் உண்டு.
- குறிப்பிட்ட ஒரு பிரச்சினை தொடர்பாக ஸஹாபாக்கள் தமது சொந்த ஆய்வின் அடிப்படையில் குறிப்பிட்டிருந்தாலும் கூட அவை சிறந்த கருத்துக்களாகவே கொள்ளப்படும். ஏனெனில் அவர்கள் பரம்பரையினருள் சிறந்த பரம்பரையினர் என நபியவர்களால் போற்றப்பட்டவர்களாவர்.
- ஒரு ஸஹாபி முன்வைத்த கருத்தானது மக்களிடையே பிரபல்யம் அடைந்து அதனை யாரும் மறுக்காவிட்டால் அது இஜ்மா ஸுகூதியின் அந்தஸ்தை அடைகிறது. *(ஏதேனும் நான்கு)*

(iv) **இஸ்லாமிய வரலாற்றில் மு∴தஸிலாக்கள் தோற்றிய பின்னனி**

*இமாம் ஹஸனுல் பஸரி(ரஹ்) பஸராப் பள்ளி வாசலில் இஸ்லாமிய வகுப்புக்களை நடாத்திக் கொணிடிருந்த போது அவர்களது மாணவர்களில் ஒருவனாயிருந்த வாஸில் பின் அதா இமாம் அவர்களுடன் பெரும் பாவம் செய்தவனின் நிலைப்பாடு பற்றித் தர்க்கித்து முரண்பட்டு பெரும் பாவம் செய்தவன் குப்ருக்கும் ஈமானுக்கும் இடையில் இருக்கிறான் எனக்கூறி இமாம் அவர்களது சபையில் இருந்து விலகிச் சென்ற நிகழ்வை விபரித்தல் வேண்டும்.*

(v) **முஸ்லிம்கள் எழுத்தணிக் கலையில் ஆர்வம் காட்ட ஏதுவான காரணிகள்**

- அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவில் தூண்டுதல்.
- அல்குர்ஆன் வசனங்களை அழகாக எழுதுவதை ஒரு பரகத்துக்குரிய தொழிலாகக் கருதி சிலர் அல்குர்ஆன் வசனங்களை அழகாக எழுத முயற்சித்தமை
- நபி (ஸல்) அவர்கள் குத்தாபுல் வஹிகளை நியமிக்கும் போது அழகான எழுத்தில் எழுதக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை.
- இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் சிற்பம், சிலை வடித்தல் போன்றவற்றைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கின் ஈடுபாடு.
- ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் வழங்கிய ஆதரவும், இஸ்லாமிய சாம்ராஜ்ய விரிவாக்கமும்.
- அறபு எழுத்துக்களின் இயல்பான போக்கு.

*(ஏதேனும் **நான்கு** விரிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல்)*

(4x5 = 20 புள்ளிகள்)

**பகுதி II**

**4. (i) இஸ்லாமிய சட்டத்துறையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள்**

- ஒரு குறிப்பிட்ட ஹதீஸை உறுதிப்படுத்துவதில் உண்டாகும் கருத்து வேறுபாடு.
- சட்ட வசனத்தை (நஸ்ஸின்) விளக்குவதில் ஏற்படும் கருத்து வேறுபாடு.
- முரண்பட்ட சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதிலும் அவற்றில் ஒன்றை உறுதிப்படுத்துவதிலும் ஏற்படும் வேறுபாடுகள்.
- சட்டவாக்க மூலாதார விதிகளில் காணப்பட்ட கருத்து வேறுபாடு.

*(இவற்றுடன் இவற்றில் இரண்டை விபரித்தல் வேண்டும்)*

**(ii) கருத்து வேறுபாடுகளின் போது பேணவேண்டிய ஒழுங்குகள்**

- கருத்தொற்றுமையான விடயங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்தல்.
- கருத்து வேறுபாடு கொண்ட விடயங்களில் விட்டுக் கொடுத்தல்.
- ஒருவரையொருவர் சதா திருத்தல் மதித்து நடத்தல்.
- ஒரு மத்ஹபின் அல்லது தனி மனிதரின் கருத்துக்களில் பிடிவாத போக்கை தவிர்த்தல்.

- அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளல்.
- விவாதங்களை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளல்.
- மார்க்கத்தை பின்பற்றுவதில் நடுநிலைப் போக்கை பின்பற்றல்.
- கலைச் சொற்களின் கருத்துக்களை அறிந்து பயன்படுத்துதல்.
- இஜ்திஹாதுக்குரிய விடயங்களை அடித்துச் செல்வதை தவிர்த்தல்.

(10x2 = 20 புள்ளிகள்)

**5.** (i) **போலி ஹதீஸ்கள் தோன்றியமைக்கான காரணங்கள்.**

- அரசியல் ரீதியான காரணங்கள்
- ஸின்த்தீக்குகள் அல்லது இஸ்லாத்தின் எதிரிகளின் நடவடிக்கைகள்.
- மொழி இனம், பிரதேசம், மத்ஹ்ஹ்ஹப்,,இமாம் எனும் விடயங்க்களில் வெறிகொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.
- உபதேசிகளும் கதை கூறுபவர்களும் இட்டுக்கட்டியவை.
- பிக்ஹிலும் இல்முல் கலாமிலும் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.
- மார்க்கத்தில் அறியாமையும் நல்லலதைச் செய்ய்யவேண்டுடும் என்ற்ற ஆசையும் கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை.
- ஆட்சியாளர்களதும் செல்வந்தர்களதும் நலன் தேடுவதற்காக இட்டுக்கட்டப்பட்டவை.
- விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டவை.

(ii) **இஸ்திஹ்ஸான் சட்ட மூலாதாரம் என்பதை ஏற்போருக்கும் மறுப்போருக்குமிடையிலான நியாயங்கள்**

*இஸ்திஹ்ஸான் சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள், இஸ்திஹ்ஸானை சட்ட மூலாதாரமாக ஏற்க மறுப்போர் முன்வைக்கும் நியாயங்கள் என்பற்றை விளக்கியிருத்தல் வேண்டும்.*

(10x2 = 20 புள்ளிகள்)

**6.** **(i) ஒரு ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் பற்றி ஆராய்க.**

*மக்பூலான ஹதீஸின் நிபந்தனைகளையும் ஸஹீஹ், ஹஸன் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசம் பற்றியும் விளக்கியிருத்தல் வேண்டும்.*

**(ii) கலீபா ம.ஃ.மூனின் காலத்தில் வானியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி**

- பைத்துல் ஹிக்மாவின் செயற்பாடு
- வானியல் அறிஞர்கள் நூற்றுக்கணக்கில் உருவாக்கப்பட்டமை
- பல்வேறு இடங்களில் வானிலை அவதான நிலையங்கள் நிறுவப்பட்டமை
- சூரியன் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டமை
- பூமி தொடர்பான அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டமை

(10x2 = 20 புள்ளிகள்)

**7.** (i) **ஹதீஸ் துறை அறிஞர்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் ஹதீஸ் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை ஆராய்க.**

*ஹதீஸ் துறை அறிஞர்களில் எவரேனும் ஒருவரின் வாழ்கைச் சுருக்கம், ஹதீஸ் கலை ஈடுபாடு, ஹதீஸ்களை கற்றல் கற்பித்தல், தொகுத்த ஹதீஸ் நூல், அதன் சிறப்பம்சங்கள் பற்றி எழுதியிருத்தல் வேண்டும்.*

(ii) **இஸ்லாமிய வரலாற்றில் அகீதா ரீதியான பிரிவுகள் தோன்றியமையினால் ஏற்பட்ட பாதக விளைவுகளை விளக்குக.**

- முஸ்லிம் சமூகத்தில் ஐக்கியம் சீர்குலைந்தமை.
- அர்த்தமற்ற வாதப்பிரதிவாதங்கள் அதிகரித்தமை.

- அகீதா கோட்பாடுகள் சர்ச்சைகள் நிறைந்த ஒரு துறையாக நோக்கப்பட்டமை.
- பகுத்தறிவு வாத சிந்தனை செல்வாக்கிற்கு முஸ்லிம் சமூகம் உட்பட்டமை.
- இஸ்லாமிய கிலாபத் வலுவிழந்து சென்றமை.
- அர்த்தமற்ற வாதப்பிரதிவாதங்களில் நேரம், பணம், அறிவு, அதிகாரம் போன்றன துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை.
- ஏகத்துவத்திற்கு முரணான கொள்கைகள் தோன்றியமை.
- இஸ்லாமிய அகீதா என்ற தோரணையில் பிற சமூக, கலாசார கருத்துக்கள்
- முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற்றமை.
- இஸ்லாம் பற்றிய தப்பபிப்பிராயங்கள் பிறரிடம் உருவாகியமை.
- கலீபாக்களும், முக்கிய தலைவர்களும் படுகொலை செய்யப்பட்டமை.

(10x2 = 20 புள்ளிகள்)

**8.** (i) **இஸ்லாமிய நாகரிகத்தின் அரசியல் துறையை கட்டியெழுப்புவதில் சுன்னாவின் செல்வாக்கைத் தெளிவுபடுத்துக.**

*நபி (ஸல்) அவர்களின் ஒட்டுமொத்த வாழ்கையே சுன்னா என்ற வகையில் அவர்களது தனிநபர், குடும்ப, சமூக ரீதியில் வழிகாட்டல்கள் எத்தகையது என்ற ரீதியிலும் அரசியல், பொருளியல், சட்டவியல் துறைகளில் அவர்களது முன்மாதிரிகளும் ஆராயப்படுதல் வேண்டும்.*

(ii) **கியாஸின் அர்கான்கள் நான்கையும் குறிப்பிட்டு அவற்றை உதாரணங்கள் கொண்டு விளக்குக.**

- அஸ்ல் - தீர்வு கூறப்பட்ட பிரச்சினை
- பர்உ - புதிய பிரச்சினை
- இல்லத் - இரு பிரச்சினைகளுக்குமிடையிலான பொதுப்பண்பு
- ஹுக்ம் - தீர்வு……*ஆகியவற்றை உதாரணங்கள் மூலம் விளக்கியிருத்தல் வேண்டும்*

(10x2 = 20 புள்ளிகள்)